76

3367

உ

குமாரகுருபரன் துணை.

கந்தரலங்காரக் கலித்துறை.

ஆலவாய் க்ஷேத்ராமிருத வித்வான்

பிரம்மஸ்ரீ

A. R. சுப்பையர் அவர்கள்

இயற்றியது.

OFFICE ... 13 OCT 193.

வித்வான் ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்
பரிசோதிக்கப்பெற்று
மதுரை ஸ்ரீ மீனம்பிகை பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 1936. [விலை அணா 1.

13 OCT 1936
MADRAS

உ

குமரகுருபரன் துணை.

கந்தரலங்காரக்கலித்துறை.

ஆலவாய் க்ஷேத்ராமிருத வித்வான்

பிரம்மஸ்ரீ

A. R. சுப்பையர் அவர்கள்

இயற்றியது.

வித்வான் ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்

பரிசோதிக்கப்பெற்று,

மதுரை ஸ்ரீ மீனாம்பிகை பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

[காப்பிரைட்] 1936. [விலை அணா 1.

உ

முருகன் துணை.

உரிமை உரை.

ஸ்ரீ சண்முகப் பெருமான் திருவருள் சுரந்து நான் இயற்றிய "கந்தரலங்காரக் கலித்துறை" என்னும் இந்நூலை எனது ஆசிரியர் மதுரை வித்வான், ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களுக்கு என் மனமுவந்து சமர்ப்பிக்கின்றேன்.

கட்டளைக் கலித்துறை.

கலித்துறைச் சீருக் கணிதந்து கல்விக் களஞ்சியமாய்ச்
சொலித்திடும் என்குரு வாகியே தோன்றிடும் தூயகுணம்
பலித்திடும் வித்வக் கிருஷ்ணசா மிக்கிதைப் பார்சரியேன்
றொலித்திடத் தந்தேன் உகந்தேற்க வேண்டும் உளமகிழ்ந்தே.

இங்ஙனம்,

A. R. சுப்பையர்,

ஆலவாய் க்ஷேத்ராமிர்த வித்வான்,

மதுரை.

13 OCT 1949 MADRAS

உ

சாற்றுகவிகள்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர்

பிரம்மஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள்.

கட்டளைக் கலித்துறை.

சூரக் களைகீண்ட தூயவன் கந்தன் துணையடிக்குச்
சாரக் கவித்திறம் சான்றசுப் பையன் தமிழினிற்சிங்
காரக் கலித்துறை ஈரைம் பதுகொண்டு கந்தாலங்
காரக் கலித்துறை சாற்றினன் கற்றோர் களிப்புறவே.

மதுரை அஸிஸ்டன்ட் இன்கம்டாக்ஸ் ஆபீஸர்

பிரம்மஸ்ரீ A. R. கணபதி ஐயரவர்கள்.

வெண்பா.

வெண்பாத் தனையறிதல் மிக்கரிதாங் காலமிதில்
ஒண்பாக் கலித்துறைநூல் ஒன்றியற்றி—மண்பால்
பெரும்புகழும் சண்முகன்றன் பேரருளும் பெற்றான்
அருந்தமிழ்ப்பாச் சுப்பையன் ஆய்ந்து.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர்

திரு. சு. நல்லசிவன் பிள்ளையவர்கள்.

விருத்தம்.

பொற்பதுமத் தடந்திகழு மதுரை மூதூர்ப்
புனிதமறை யவர்மரபிற் புகழ்மிக் கார்ந்தோன்
நற்பதுமத் திருமகளும் நாவின் மாதும்
நயந்துறையுஞ் சுப்பையநன் னாமம் பூண்டோன்
அற்புதஞ்சே ரறுமுகவே ளினுக்குக் கந்த
ரலங்காரக் கலித்துறைப்பா வணிந்தா னின்னோன்
சொற்புதுமை யருட்கவியைப் படிப்போர் கேட்போர்
தோற்றுமோ ரெழுபிறப்பு மாற்றுவாரே.

முக்கனியோ தேனோகற் கண்டோ பாகோ
மூவாத தேவரமிழ் தோவென் றுயர்ந்தோர்
திக்கனைத்தும் புகழுமிந்நூ லினிமை யெம்மாற்
செப்பற்பாற் றோவினுமிச் சிறந்தோன் பன்னூல்
தக்கவர்போற் றிடப்புவிக்குத் தந்து நீடு
தாரதலத்தில் வாழ்நாளுந் தழைத்து மைந்தர்
ஒக்கலுடன் வாழ்விவ ணெல்லாம் வல்ல
வொருமுதல்வ னடியெமுடி யுறவைப் போமே.

மதுரை வித்வானும் எப். எம். எஸ்.(F.M.S.) பென்ஷனருமான

திரு. மு. நாராயணசாமி பிள்ளையவர்கள்.

கட்டளைக் கலித்துறை.

கந்த ரலங்காரக் கற்கண் டெனுமோர் கலித்துறையைச்
சொந்தமாய்த் தண்டமிழ்ச் சொற்கண் டதனாற் சொலித்துதிக்குஞ்
சுந்தரப் பேர்மிகுஞ் சுப்பையன் பாக்கள் சுவைநிறைந்த
வந்தனைக் காகும் மணங்கொண்ட பண்புள்ள மாமலரே.

தந்தை மகிழப் பிரணவஞ் சாற்றிய சண்முகனை
எந்த முறையு மியற்றி வணங்கு மெழிலுடைய
விந்தை யுலகு வியக்குந் திருமிகு விற்பனஞ்சேர்
சிந்தையோன் சுப்பையன் செப்புங் கலித்துறைச் சீர்நயமே.

மதுரைத் தமிழ்வித்வானும் அத்வைத ஆராய்ச்சியாளருமாகிய

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்.

கட்டளைக் கலித்துறை.

சுப்பையன் சொன்ன துதிப்பாக் கலித்துறைச் சொற்பொருளை
அப்பைய மின்றியா னாய்ந்தேன் தமிழ்ச்சுவை ஆங்கறிந்தேன்
ஒப்புக் குரைப்பவன் யானல்ல கற்றார் உளத்தினிக்க
முப்பழஞ் சர்க்கரை கற்கண்டு தேன்ரசம் மொய்த்துகுமே.

வேதம் பயின்றார்ந்த விற்பனன் சுப்பையன் வேல்முருகன்
பாதம் பயின்றார்ந்த பாசுரங் காண்பக்தர் பாவலர்காள்!
மாதம் ஒன்றாயினும் வாசித்து வம்மின் மறலியொரு
காதம் அன்றோ நின்று சேவிப்பன் நம்மையிக் காலத்திலே.

வெண்பா.

கந்தரலங் காரக் கலித்துறையா மிந்நூலைத்
தந்தவரா ரென்பீரோ தாரணியில்—சந்தஞ்சொல்
அப்பழய ஞான அருணகிரி அல்லதமிழ்ச்
சுப்பையன் என்போம் துணிந்து.

உ

குமாரகுருபரன் துணை.

கந்தரலங்காரக் கலித்துறை.

கணேசர் ஸ்தோத்திரம்.

சீர்மேவும் சண்முகன் மீதே கலித்துறை செப்புதற்குப்
பார்மேவும் பால கணேசநின் பங்கயப் பாதமதில்
நார்மேவும் நன்மலர் கொண்டேற்றிச் சந்ததம் நான்பணிந்தேன்
கூர்மேவும் கோடார்ந்த குஞ்சரா வந்தருள் கூருவையே.

வாணி துதி.

வெண்டா மரைதனில் வாழ்ந்திடும் வாணி விரைந்தெனது
தண்டா மரைமலர் தாரணி வேலணி சண்முகனைக்
கண்டா ருவக்கக் கலித்துறை யாலலங் காரமது
கொண்டா டவேநாவில் வந்தாசி நித்தமும் கூறுவையே.

நாரணன் துதி.

வண்ணத் தமிழுக்கு வந்துமுத் தந்தந்த மாதாசாம்
கண்ணுக் கினியமீ னாட்சியின் செல்வக் களஞ்சியமாய்த்
திண்ணத் துடன்வேல் தரித்திடும் சண்முகத் தெய்வமதை
நண்ணக் கலித்துறை நான்பாட நாரணன் நற்றுணையே.

சோமசுந்தரர் துதி.

பத்தித் தலமாகப் பண்பாய் விளங்குமிப் பாருலகில்
முத்திக் குகந்த முழுமுதல் வித்தாம் முருகனது
சித்தங் களித்திடச் செப்புங் கலித்துறைச் சீரதனில்
அத்தங் கொடுத்தே அருள்வான்பொன் னம்பலத் தாடுவனே

மீனாட்சி துதி.

கொம்மைசேர் வேற்கரம் கொண்ட குமர குருபரனைச்
செம்மையாய்ப் பூசித்துச் சென்மப் பிணியறச் செப்படியர்
தம்மையே காத்திடும் கந்தன் கலித்துறை சாற்றுதற்கு
அம்மையே மீனாட்சி அன்பாகக் கண்பார்த் தருளுவையே

நூல்.

சீர்கொண்ட சேவலும் செந்நிற மேனியும் செங்கதிரின்
கூர்கொண்ட வேலும் குளிர்ந்த முகமும் குருபரநின்
பேர்கொண்ட நாமமும் போன்பு பூத்த பெருமனமும்
தார்கொண்டநன்மார்பும்கண்டெந்தனுள்ளம் தழைக்கின்றதே

கருமக் கடல்நீந்தி நின்றன் கருணைக் கடல்முழுகத்
தருமப் பிரபுவே சார்ந்தனன் நல்வழி தந்துதவி
வருமச் சிகியேறி வள்ளியும் யானையும் வானவரும்
பருமத் தடிபட்ட கண்ணனும் பார்க்கப் பரிந்தருளே. 2

கானின்ற பெண்ணன்று கற்கண்டு தேன்மாக் கலந்துதாத்
தானின்று தின்ற தகையே உனதிரு தாளிணையை
நானின்று கைகூப்பி மெய்சிலிர்க் கத்தாழ்ந்து நாக்குளற
வானின் றருமல ராலுனைப் போற்றி வணங்கினனே 3

முன்னம் முனிவன் மொழிதனைக் கேட்டு முறுவலுறும்
அன்னம் பழித்த நடைகொண்ட அன்பெனும் ஆரணங்கைத்
தன்னந் தனியாகத் தார்சூடி நின்று தழுவியது
சின்னஞ் சிறுவனு மென்றனை யாண்டிட்ட சின்மயமே. 4

வாரியை வாரியே உண்ட முனிவன் மனமகிழச்
சாரியை மோனையைப் பெற்றிடும் முத்தமிழ் தந்தரிய
பாரியை ஊடிடக் கானகம் சென்றவா பண்புறுபூ
மாரியை நின்னிரு தாளில் பொழிந்தனன் மாசறவே. 5

சங்கும் விளைந்திடும் தண்கடல் சூழ்ந்த சகமதனில்
எங்கும் நிறைந்து விளங்கும் இறையேநீ இன்பமொடென்
பொங்கும் உளத்தில் புகுந்து விளையாடப் பூரணமாய்
இங்கும் வருவாய் இனிதருள் செய்வாய் இதுததியே 6

கம்பர் புகழேந்தி காளமே கம்வில்லி கச்சியப்பர்
உம்பர் புகழும் கவியொட்டக் கூத்தன் உலகிலுள
வம்பர் நடுங்கும் வசைமொழி யாண்டானும் மற்றுமுள
கும்பர் முனியும் வியக்க எனையாள் குருபரனே. 7

கல்லுக்குள் தேரையும் கர்ப்பத்துள் பிள்ளையும் கண்டிடாமல்
நல்லுண வைத்தரும் நாயகா நம்பியே நான்பணிந்தேன்
புல்லுக்கும் பூண்டுக்கும் ஊணுன நின்னையான் போற்றிடவோர்
சொல்லுக்கும் பஞ்சமோ சொல்லினுட் டோன்றிய சுந்திரமே.

நனவும் கனவும் நழுவும் சுழுத்தியும் நாடொறுமென்
மனதி லுதித்து வருவதும் போவதும் வாழ்க்கை யென்றால்
உனது திருவடி சார்ந்தென் பிறப்பிறப் போய்வதென்றோ
எனது பரிபக் குவமுணர்ந் தாள்குகா இத்தலத்தே. 9

காவடி தோளிற் கனிவுடன் தூக்கிக் கருணைதரும்
பூவடி போற்றிப் புகழும் அடியார்க்குப் பூதலத்தில்
சேவடி நல்கிச் சிறப்பைக் கொடுக்குந் திருமுருகா
மூவடி யேற்றோன் மருகா எனையாள் முகமலர்ந்தே. 10

ஓடும் மனதை ஒருநிலை யாக்கி உணர்விலுனைத்
தேடும் சிறுவன் தினமுணத் தந்திடு தேனமிர்தம்
ஊடும் படிசெய் உலகே பணியும் உனதிருதாள்
நாடும் பொருளே நனிவந் தருள்வாய் நலமுடனே. 11

எண்ணும் பொழுதென் உடலுஞ் சிலிர்க்க இனிமைதர
விண்ணும் புகழ விரிவாய் மயிலில் விரைவுடனிம்
மண்ணும் மகிழ மலரடி தந்தாள் மனங் குளிர்ந்து
கண்ணும் கருத்தும் கனிவா யுனதருள் கண்டிடவே. 12

கன்னல் ரசமும் கசந்த தெனும்படி காதலுறும்
மின்னல் கொடியிடை வள்ளி தினைத்தேன் விரும்பியதைப்
பன்னல் ரசமாய்ப் பருகிய வாவென்றன் பாசவினை
இன்னல் தவிர்த்தெனை இங்குவந் தேற்பாய் இனிதுடனே. 13

உடும்புப் பிடிபோல் உலக மதனில் உழன்றுழன்று
குடும்ப மடுவில் விழுந்து தவிக்கும் குழந்தையெனை
இடும்ப னிடரைத் துலைத்து மினிதருள் ஈந்ததுபோல்
கடம்ப மயில்மீது வந்தெனை யாள்வாய் கவலறவே. 14

பஞ்சவர் சூழ்ந்தொரு பம்பர மாட்டுமிப் பாழுடம்பில்
கொஞ்சமும் நின்னருள் கொள்ளத் தெரியாமற் கூடியந்தோ
சஞ்சல முற்றனன் சண்முகா இன்னல் தவிர்த்தினியென்
நெஞ்சகந் தன்னிலே நீவிளை யாடுவாய் நித்தமுமே. 15

அஞ்சலென் றோருக் கபய மளித்திடும் அம்பிகையின்
கொஞ்சலுக் கேற்ற குமாரநின் நாமங்கள் கூறிநிதம்
தஞ்சமென் றெண்ணியே தாட்பதம் போற்றத் தாரணிதனில்
வஞ்சனை யற்றநின் மைந்தனை யாட்கொள வந்தருளே. 16

முத்துக் கிரீடமும் மோகன வாரமும் முன்னுதலும்
வித்துக் குரியபொன் நூலும்நன் மார்பில் விளங்கசிவ
சத்துக் கினிய சரண்பெறு நின்னடி சார்ந்திடுமென்
நத்துக் குகந்த முருகா வருவாய் நலந்தரவே. 17

கடல்மா வெனுஞ்சூர பத்மன் கதறக் களமதனில்
அடல்சே வலுமயி லாகவும் செய்தே யகமகிழ்ந்தாய்
திடல்தா ருகக்குன் றினையே துளைத்தநின் சீரடிக்கென்
உடலா விபொருள் அனைத்தையுந் தந்தேன் உகந்திடவே. 18

முப்புரி நூலும் முடிதனில் சூடிய முன்கலையும்
இப்புவி போற்றத் தரித்திடும் பெம்மான் இனிமையுடன்
அப்புவில் தந்த அறுமுக ஞான அருமணியே
செப்புநின் மைந்தனான் காணமுன் வந்திடு சீருடனே. 19

பின்னும் சடைமுடி மீதிலோர் பெண்ணேற்ற பித்தனார்முன்
துன்னும் வரம் பெற்று வந்திடும் மாபெருந் துட்டரையுன்
மின்னும் வடிவேல் உரம்பெற வென்றிடும் மிக்கவனே
இன்னும் தடையே னெனையாளச் சற்றிங் கியம்புவையே 20

செம்பொன் மணிமண் டலத்தில் செயங்கொண்ட சீருடன்மேல்
உம்பர் பணிந்து துதிக்க உறைந்திடும் உட்பொருளாய்
நம்பும் அடியவர் இன்னல் அகற்றிய நாயகமே
வெம்பும் எனதோர் வினைதீர்த் திடவா விரைவினிலே 21

சூல்கொண்ட மேகமே போன்று விளங்கும் சுரிகுழலார்
மேல்கொண்ட மோகத்தால் மும்மூர்த்திபோற்றிடும் வித்தகநின்
பால்கொண்ட மேனியும் பங்கயப் பாதமும் பன்னிருகை
வேல்கொண்ட சீரையும் எண்ணேன் கடைத்தேற வேண்டினனே 22

ஊழியின் வல்வினை யால்மடு விற்கரி ஓலமிட
ஆழியின் னின்றதி வேகமாய்ச் சென்றங் கருளியுறித்
தாழியின் வெண்ணையை உண்டோன் மருகநின் தாட்பணிந்தேன்
வாழியென் றென்னையாள் வந்து மயிலில் வகையுடனே 23

அன்றொரு நாளமிர் தங்கடைந் திட்டபோ தாழ்கடலில்
நின்றெழுந் துற்ற விடங்கண்டு வானுய்ய நேர்த்தியதாய்ச்
சென்றதை யுண்ட சிவனார் மகனெனச் செப்பியநீ
இன்றொரு சேயனை யேற்பது பாரமோ இப்புவிக்கே 24

விண்ணின் தலத்து விறல்வேந்தன் வாழ்வு விரும்பிடவிம்
மண்ணின் தலத்துற்று மாதவச் சூரெனும் மாவறுத்துக்
கண்ணின் முனேபெரும் வாழ்வா சீந்த கனிரசமே
பண்ணின் மலரால் பகர்ந்தேன் எனையுங்கண் பார்த்தருளே 25

குளம்படு பாசிக் குவிமுகில் போன்றிடும் கூந்தலன்னார்
வளம்படு போகமே வாழ்வென நம்பி வதிந்திடினும்
உளம்படு முன்னை மறந்தது முண்டோ உனதருமைக்
களம்படு நற்கழல் நல்கியே காப்பாய் கலியுகத்தே 26

வண்ணப்பொற் கும்ப வரைபோன்ற வன்முலை மாதரின்பம்
எண்ணப்பெற் றேயுன தன்பை மறந்திட்ட என்றனது
விண்ணப்பம் பெற்று விரைவாக வந்தாள் விருப்பமுடன்
திண்ணக்கற் குன்றில் திருவாய் விளங்கும் செழுஞ்சுடரே 27

கடவுள் புகன்ற கவியிலும் குற்றம் கணித்தவையில்
திடமாய் நவிலச் சிவன்கோப மாய்நோக்கத் தீய்ந்தழிந்த
மடமை மனங்கொண்ட நக்கீர மாபுல வன்றனைமுன்
தொடரும் வினையறுத் தாண்டவா என்முன் துலங்குவையே 28

புட்குலம் கூவிடப் புள்ளிமான் ஆர்ப்பப் புனிதமுடன்
குக்குடம் சப்திக்கக் குன்றினில் வாழும் குருமணியே
முக்குணம் தன்னில் முதற்குண மீந்தருள் முன்னிலையில்
பக்குவம் கொண்டுள பக்தரை யாண்டிடும் பார்த்திபனே 29

வீழ்த்தும் படிவந்த வீரர்மேல் வேலினை வீசிநனி
வாழ்த்தும் படியாக வானோர்க் கரசீந்த மால்மருகா
தாழ்த்தும் இருவினை தன்னிற் கிடந்து தபங்குமெனை
ஆழ்த்தும் நினதடி யாங்கரை சேர அருளுவையே 30

திருவாத வூரரைத் தேற்றிட அன்று திருவுளங்கொண்
டொருகாதந் தன்னிலே ஊர்நரி மாவாக்கி உண்மையினில்
உருகாத பாண்டியன் உள்ளங் களிக்க உவந்தளித்த
கருகாத தாணிக் கர்த்தன் சுதாவெனைக் காத்தருளே 31

எங்கும் பரவி எழிலாகி நிற்கும் இமயவரை
மங்கும் படிக்குச் சிறுமலர்ச் செண்டாக வானெறிந்து
தங்கும் புகழ்கொண்ட தாய்தரும் செல்வத் தவமணியே
பொங்கும் நினதடி போற்றிடும் என்னையாள் பூதலத்தே 32

நீலப்புள் ளேறியே நேர்த்தியாய் நிற்கும் நிருமலநின்
கோலத்தைக் காணக் குழந்தையான் நித்தங்கைகூப்பிநின்றேன்
தாலத்துள் என்றனுக் குன்னருங் காட்சியைத் தந்தருள்வாய்
சீலத்துள் வைகும் பெரியோர்கள் காணும் சிவமயமே. 33

நஞ்சு விழிமாதர் நன்முலை தன்னையே நாடியதில்
மிஞ்சு சுகபோக மேகொண்டு மூன்றுமே மீளறியாப்
பஞ்சு படும்பாடு போன்றியா னிங்கு பாதவித்தேன்
எஞ்சு மெனையாள் கிளிமொழி வள்ளிக் கினியவனே 34

உந்திக் கமலத் துறையும் அயனும் உளமகிழச்
செந்திற் பதிவாழும் சீருற்ற செம்மலர்ச் சேவடியில்
அந்திப் பகலாய் அருமைசேர் நின்றனு றக்காத்தைச்
சிந்தித் துரைத்த சிறுவ னெனையாள் செயமுறவே 35

மானினஞ் சாட மயிலினம் ஆட மகிழ்வுடனற்
றேனினஞ் சூழ்ந்திடச் சிங்கேறு பாய்ந்திடத் தென்புறுவிண்
வானினம் மேவ வளம்பெறுங் குன்றினில் வாழ்ந்திடுமக்
கானினங் காணக் கடம்பனே என்னையாள் கண்திறந்தே 36

வேலும் மயிலும் விரிந்திடும் மார்பில் விளங்கிடும்பொன்
நூலும் பிறையின் நுதலும் மறையின் நுணுக்கமுமென்
மேலும் அருள் மிளிர்ந்திடுந் தோற்றமும் மேனிதனில்
பாலும் வழியக்கண் டென்மன மீன்றது பக்தியையே 37

கருவுற்ற பாசக் குழியிலே வீழ்ந்து கடையனென
உருவுற்ற என்னொரு மாபவம் தீர உயர்மயிலில்
திருவுற்ற தெய்வத் தெரிசனம் தந்தடர் தீதகற்றிச்
செருவுற்ற செம்பொற் கழல்வைத் தருள்வாய் சிரந்தனிலே 38

திரைகட லேழையும் காஞ்சன மாலைநற் சீருறவே
விரைவுடன் மூர்த்தித் தலந்தீர்த்த மென்று விளம்பிடுசொல்
உரையுடன் எங்கும் துலங்கும் மதுரையில் ஓங்கிடவக்
கரையுடன் செய்யான் மைந்தனே வந்தாள் கருத்துடனே 39

அந்திப் பொழுதி லகப்பட் டலையுமோ ரந்தகன்போல்
சிந்தித் திடவே தெரியா திருந்த சிறுவனுளம்
வந்தித் திடவே வழியது சொல்வாய் வகையுடநற்
செந்திப் பதிவாழ் சிவனு ரருளிய சேவகனே 40

கருக்கடல் வந்து கலங்குதல் போதாது காலமெலாம்
இருட்கடல் தன்னிலும் ஏழையான் வீழ்ந்தேன் இனியுமெனை
மருட்கடல் என்னுமோர் வன்கடல் ஆழ்த்தாது மாகுகநின்
அருட்கடல் நீராட்டி அன்பனை ஆதரித் தாளுவையே 41

கானனீர் கண்டு கலங்குநல் மான்போல் கருத்தழிந்து
வேனனீர் ஊறிடும் விண்மாத ரல்குலில் வீழ்ந்தழிந்தேன்
தானநீர் கொள்பரந் தாமன் மருகா தமிழமிர்த
பானநீர் வேண்டிய பாலன் எனக்கருள் பாங்குடனே 42

வில்லும் புகழியும் கைக்கொண்டு குன்றினில் வீற்றிருந்து
சொல்லும் பிரணவத் தோத்திரங் கேட்கின்ற சுப்ரமண்யா
கல்லும் கரையக் கமழு மிருதாளில் கைகுவித்தேன்
அல்லும் பகலும் பணியும் எனைச்சேருன் அம்பலத்தே 43

நாத மயமாகி நானிலந் தன்னிலே நான்மறையாம்
வேத மதிலுறை கின்ற விமலன் விரும்பிடநற்
போத மருளினுப் ஞானிகள் போற்றப் புவியதனில்
ஆத ரவுதந்து அஞ்சலென் றருள்வாய் அறுமுகனே. 44

அன்று வரையைக் குடைசெய்த கண்ணன் அகமகிழ
என்றும் புகழ்ந்திடும் இன்ப மருகா எனதுளத்தில்
நின்று மறைதனை நேர்த்தியாய் ஓதுக நீணிலத்தில்
குன்று தொறும்விளை யாடும் குகனே குலக்கொழுந்தே. 45

சம்போகம் தன்னிலே தானின்பம் கொண்டு தமக்குரிய
செம்பொன் விலைபெறும் சேல்விழி மாதரின் சிற்றிடையே
உம்பர் சுகமென உன்னி உழலும் ஒருவனுக்குன்
அம்போ ருகம்போன்ற ஆறு முகங்காண ஆவலதே. 46

ஆலமுண் டந்நாள் அமரர் துயரை அகற்றியதோர்
நீலகண் டன்பரன் நேர்த்தியா யீன்ற நிருமலமுன்
தாலமுண் டன்பரை யாண்டு துளவநற் றாரணியும்
கோலமுண் டோன்மரு காவந் தெனக்காசி கூறுவையே. 47

விண்பூத்த மாமதி போல விளங்கிடும் வேல்முருகா
தண்பூத்த வெண்முத் தணிந்த தகையேயித் தாரணியில்
கண்பூத்த னன்யான் கணக்கிலா நின்சேவை காண்பதற்கு
மண்பூத்த ரத்னா பரணன் மார்பா மகிழ்ந்தருளே. 48

உள்ளத் துயர்நீக்க ஒண்மைப் பொருளாய் உறையுமுனை
எள்ளத் தனையும் நினையா திருந்திட்ட தென்பிழைகாண்
கள்ளக் கயவனா மென்றனைக் காத்தருள் கானகத்தில்
தெள்ளத் தினைமாவும் தேனுஞ்சேர்த் துண்ட திருவருளே. 49

போர்முகம் தன்னிலே போந்திடுஞ் சூரனைப் புண்படுத்திக்
கார்முகம் கண்டு களிக்கும் மயிலாக் கனிவுறமுன்
நேர்முகம் கொண்ட நினதிரு தாளில் நிலைநிறுத்தும்
சீர்முகம் தந்தாள் சிறுவனான் போற்றிச் சிறப்புறவே. 50

புனலுறும் முத்தே புலனுக்கு மெட்டாத புத்தமுதே
கனலுறும் வேலினாற் கன்னெஞ்சச் சூரைக் கருவறுத்தாய்
அனலுறும் நன்மெழு கேபோல் உருகுமென் னாருளத்தில்
மினலுறும் பொற்பாத மேவைத் தருள்வாய் மிளிர்பெறவே 51

சதுர்த் தயனைப் பிரணவம் வேண்டிச் சபைநடுவில்
மதுரத் துடனே வினவிய மாசற்ற மாதவபூம்
பதுமத் திருவடி பற்றித் துதித்திடப் பண்புடனின்
வதுவைத் திருக்கோலங் காண வருவாய் வகையுடனே. 52

நச்சர வம்பூண்ட நாதன் செவியில் நலமுடனந்
தச்சணங் காணவே ஓமெனும் மந்திரம் தானுரைத்த
மச்சாவ தாரன் மருகனே நின்ருள் மலரடியில்
உச்சரிப் பேனென்றன் புன்மொழி நீயேற் றுகந்தருளே. 53

பழமாகப் பண்பாய்ப் பழனியி லுள்ள பரம்பொருளே
கிழமாகச் சென்றுமுன் கின்னரி பாடும் கிளிவனத்தில்
முழுமாக ஓங்கும் தருவாகி நின்ற முழுமுதலே
அழகாக எந்தனை நின்தாளி லாழ்த்தி அருளுவையே. 54

அத்தன் தருமாங் கனிபெற வேயன் றவனிதனில்
சித்தங் களிக்கச் சிகியூர்ந் திடவச் சிவனுவந்து
பத்தர்க் கருளப் பழமாக நில்லெனப் பார்புகழ
நித்தம் பழனியில் நின்றநின் தாள்தா நினைப்புறவே. 55

அப்ப ரடிகளும் ஆழ்ஞான சம்பந்த ரன்பரொடு
ஒப்ப உரைத்திடும் சுந்தரர் மாணிக்க ரோடுகவி
செப்ப வருமருட் பாராம லிங்கரும் சேவைதர
இப்ப ரதகண்ட மீதி லெனையாள் இசைபெறவே. 56

மாதுமை யாடரும் மாவடி வேலை மகிழ்வுடனோர்
சாதுவை யாளத் தடக்கையில் கொண்டிச் சகமதனில்
தீதுசெய் துட்டரைத் தெண்டித்த தெய்வ சிகாமணியே
யாதுமே தோன்று தலையுமிப் பாலனை ஆண்டருளே. 57

முத்தும் பவளம் முழுநீலப் பச்சையிம் மூவுலகும்
நத்தும் வயிரம் சிவப்புகோ மேதகம் நாடுமுயிர்ச்
சத்தும் நிறைபுட்ப ராகவை டூரியத் தாரணிந்து
எத்தும் மயிலில் எனையாள வேண்டினேன் ஏற்றருளே. 58

பிறைதனைச் சூடிய பெம்மான் புதல்வநின் பீடறிந்தென்
குறைதனை நின்னிடங் கூறினேன் கேட்டுக் குணமுடனே
மறைதனை நல்கி மயலறச் செய்துசன் மார்க்கமெனும்
துறைதனைக் காட்டியிங் கீடேற்று வாயெனைத் தூயவனே. 59

கன்னம் குழிவிழக் கண்மங்க நாக்கோணக் காதடைத்துச்
சின்னம் சிறுநீர் வழிய நினைவறத் தென்திசையின்
மன்னன் பகட்டிலே வந்துகைக் கொள்ளுமுன் மாட்சியுறும்
பொன்னம் பலவன் சுதாவென நின்தாள் புகுத்துவையே. 60

சீரணி பெற்றுத் திகழ்ந்த நிருதரின் சேனைதனைப்
பேரணி கொண்ட பெரியநின் தானையால் பெட்புடனே
கூரணி யிட்டுக் குலைத்துத் தகர்த்த குருபரனே
தாரணி பொற்கழல் தந்தருள் என்சிரம் தாங்கிட்வே. 61

மன்னவன் இந்திரன் மாபவம் தீர்த்த மதுரைதனில்
நன்னயந் தோன்றிடும் நற்றமிழ்ச் சங்கம் நனிவளர்த்த
பன்னகம் பூண்சோம சுந்தரர் தந்திடும் பால்முருகா
பொன்னடி போற்றிப் புகழும் எனக்கருள் பொற்பதமே. 62

மையிட்ட மான்விழி மாதர் மயலில் மயங்கியுனைச்
செய்யுட் டுறைத்துதி செப்பும் சிறுவனைச் சீர்திருத்திக்
கையிட் டணைத்துன் கருணைநன் னீரங் கடலமுதென்
மெய்யிட் டுறவணிக் தாள்வாய் பிறவி வினையறவே. 63

மூவிரு நன்முகம் முங்கான்கு கைமா முடியதனில்
மேவிய பொன்னூர் கிரீடமும் மேன்மையாய் மின்னலொளி
தாவிய வேலும் சமர்த்துடன் கொண்டிடும் சண்முகனே
கூவிய நின்சேய்க் குறைதவிர்த் தாள்வாய் குவலயத்தே 64

மதுநிறை மாமலர் மாலையை மார்பணி மால்மருகா
சதுர்மறை வேதன் பணிந்து தழவிடும் சற்குருநான்
முதுமொழி யாலுனை முன்னின்று போற்றினேன் மோடிசெயா
திதுகதி வந்தெனை நின்னடி சேர்ப்பாய் எழிலுறவே 65

அன்றொரு நாளம் பலத்துநின் றூடிய ஐயனைப்போல்
இன்றொரு சேயுளம் தன்னில்வந் தாடியே இன்பமுற
நின்றொரு வார்த்தை நிகழ்த்தா திருப்பது நீதியிதோ
நன்றொரு சூர்மா நடுவிற் பிளந்திட்ட நாயகமே 66

தாயும்நற் றந்தையும் சார்ந்த உறவின் சகலருமே
நீயென்று நானெண்ணி நிற்சிந்தை யாகவே நிட்டைதனில்
தோயுமென் னுள்ளத் துதித்து மிளிர்கநீள் தோகையுடன்
ஆயும்புட் டாரணி ஐயா அறுமுகா அன்புறவே 67

வசைமொழி கூறிடும் வம்பர் குழுவில் வதிந்துநொந்து
திசையறி யாதென்ன செய்வதென் றேங்கும் சிறுவனுக்காய்
விசையுடன் வந்திடு வேலொடு வெம்பகை மீட்டிடுவிண்
மிசையருள் கொண்டு மிளிரும் புகழுற்ற மீச்சுரனே 68

காக்கை யமரப் பனம்பழம் வீழ்ந்த கதையதுபோல்
ஆக்கை யெனுமிவ் வுடலோ டுயர்ந்த அருட்டருவின்
மீக்கிளை யுற்ற கனியில் அமர்ந்தேன் மிளிருநடி
தேக்கி அருள்வாய் திருமயி லேறிய தேசிகனே 69

ஞானம் பெறுசம்பந் தர்க்குத்தா ளந்தந்த நல்லரனுர்
மோனம் பெறமுன் பிரணவ மோதிய முன்னவநின்
கானம் தனையே கவியிற் றுதித்தேனென் கண்ணெதிரில்
தானம் தவமும் தயையும் தருவாய் தரணியிலே 70

வால்பட் டழிந்தது நற்றென்னி லங்கை வருமுனிவன்
கால்பட் டழிந்தது மாவிந்த பர்வதம் காவலன்செங்
கோல்பட் டழிந்தது குற்றங்க ளெல்லாம் குமரனது
வேல்பட் டழிந்தது மூவேழில் வந்தவென் வெவ்வினையே 71

நித்தம் பகீரதன் நீள்தந்தை யர்க்காக நீணிலத்தில்
பித்தன் எனப்போற்றும் பெம்மான்தாள் பற்றப் பிரியமுடன்
சுத்தந் தரவரும் தூயநற் கங்கையைத் தோன்றிடச்செய்
அத்தன் தருஞ்சுதா ஆண்டருள் யானுன் அடியவனே 72

பாச வினைபற்றிப் பாவியான் நித்தம் பரதவித்து
வாச மலர்பூண்டு மன்னுறும் நின்றன் வடிவமதை
நேச முடனே நினைந்தேன் எனையும் நினதடியில்
தாச னெனக்கொண் டிடவா நிதமும் தழுவிடவே. 73

தாருற்ற மார்பும் தழைக்கின்ற சூரைத் தரித்திடநற்
கூருற்ற வேலும் குழைவுற்ற உள்ளமும் கொண்டிடுமுன்
பாருற்ற தாளினில் பக்தியாய்ப் பாலன் பணிந்திடவா
ஏருற்ற குன்றில் இனிதாக வாழும் எனதிறையே. 74

துப்பிதழ் வள்ளி துயர்தனைத் தீர்த்திடத் தோன்றிவளங்
கப்பிய காவனம் சென்று கலந்திடும் கார்த்திகனே
ஒப்பிய நின்னருஞ் சேவடி யுற்ற ஒருவனுக்குன்
திப்பிய தண்ணருள் தந்தெனை நித்தமும் தேற்றுவையே. 75

மணிகள் பதித்து மருவிய பொன்னின் மலரடியில்
பணிகள் செயவே பரிவாய் விரும்பிநற் பக்தியுடன்
துணிகொள் மனமோ டுனையே துதித்தேன் துயர்தருமென்
பிணிகள் அறவே வருவாய் சிறுவனென் பீடுறவே. 76

கலியறப் போற்றிடில் துட்டக் கயவர்க்கும் கைகொடுத்து
வலிவுறச் சாயுட்ச நற்பத மீந்தவர் வாழ்வதனை
நலிவுறச் செய்யாது மேன்மையாய்க் காத்திடும் நன்முருகா
மெலிவுறு மென்றனைத் தேற்றிவந் தின்னல் விலக்குவையே 77

தன்குறை காணாது தீயது செய்யும் தறுதலையர்
என்குறை தீர்ப்பரோ ஏந்தலே நின்கழ லேற்றிடுமென்
வன்குறை நீக்க வருவாய் வனமயில் வாகனத்தில்
முன்குறை போக்கி முனிவரை யாண்ட முழுமுதலே. 78

காமனை நீருக்கும் கர்த்தன் அளித்திட்ட கற்பகமே
பூமனை வெஞ்சிறை வைத்து மறையைப் புகட்டியவா
ஏமனை என்னிடம் வாரா தகற்றுவாய் ஏற்றபரந்
தாமனை மாம னெனக்கண்ட வாபுகழ் தான்பெறவே. 79

முதிரும் பழஞ்சோலை தன்னிலே நின்றுநன் முத்தமிழை
உதிரும் படிசெய்து வாணர்க் களித்திட்ட உத்தமவிண்
அதிரும் படியாக ஆனையும் சேனையும் ஆர்ந்திடவென்
எதிரில் வருகநீ ஏழையான் நித்தமும் இன்புறவே. 80

சூர குலம்போற்றும் சுப்பிர மண்யா சுரருலகு
வீர ருவக்க விடுத்தனை வெம்போரில் வேலதனை
சோர னகஞ்சீர் திருத்திட இன்னமும் சோதனையேன்
ஏரகந் தன்னில் இருந்திடும் எந்தாய் எழிற்றிருவே. 81

கூவின கோழியும் குன்றுற்ற காவினில் கூத்திடமுன்
தாவின கான மயிலொடு வேலும் தரைக்குளருள்
மேவின மூவிரு மின்னலைப் போன்ற மிளிர்முகத்தோ
டாவின நற்குடி வாழ்ந்திடும் அண்ணலே ஆண்டருளே. 82

அன்பர கத்தினி லாழ்ந்து வசித்திடும் ஐயநின்னோ
டின்புற வெண்ணி எழிலுறு மின்ன லிடையவளை
மென்பற வைவாழ் புனந்தனில் சேர்ந்தநல் வேல்முருகா
தென்பரங் குன்றி லெனையாள்வை தெய்வத் திருவருளே. 83

ஆதவன் தன்மையால் அம்போ ருகவாய் அலர்ந்ததுநற்
சீதரன் செல்வ மருகனே நித்தமுன் சீர்பெருகும்
மாதவத் தாள்கண்டென் தாமரை யுள்ளம் மலர்ந்ததினிக்
கோதறச் செய்து குமரனே வந்தாள் குணமுடனே. 84

சீருற நின்னு றெழுத்தையே எண்ணியென் சிந்தையிலே
வேருறச் செய்ய வருவா யமரர்கள் விண்ணுலகாம்
பாருற வேய்ன்று வெம்பகை தீர்த்திட்ட பங்கயப்பூந்
தாருற வேயுள தாடனைத் தந்தாள் தாணியிலே. 85

நீர்மேல் குமிழிபோல் நிற்பதும் மாய்வதும் நின்றுநின்று
பார்மேல் துலங்கியே பாருள் மறையுமிப் பாழுடம்பைத்
தார்மேல் அணிந்திடும் சண்முகா நம்பித் தளர்வடைந்தேன்
மார்மேல் இலங்க மயிலில்வந் தென்னையாள் மாசறுத்தே 86

கைதனில் பாசக் கயிறுடன் வந்திடுங் காலனையென்
மெய்தனில் தீண்டாது வேருய் விரட்ட விதியறிந்தேன்
செய்தவம் செய்து சிறப்புடன் கந்தன் திருவுருவை
உய்தவத் தோடென் உளம்பதித் தேன்வேலும் ஒன்றுளதே

விண்மணி என்றே விளம்பும் விரிசடை வெள்விடையோன்
கண்மணி யேமா தவத்தர் உளமதில் காணுமொரு
தண்மணி யேதனிச் சைவமே அன்பு தழைக்கவரும்
சண்மணி யேயெனைச் சந்ததம் காப்பாய் தாணியிலே 88

சென்மப் பிணியறச் சிந்திக்கு மிந்தச் சிறுவனைநீ
வன்மங் கொளாது வனமயில் மீதேறி வந்தணுகிக்
கன்மங்க ளெல்லாம்நான்காணுமற் போக்கிக் ககனமுளோர்
நன்மங் களம்பாட நன்மை யளிப்பாயென் நாயகமே 89

ஓட்டை களொன்பது உற்றவோர் ஊத்தை உடலமெனும்
வீட்டை மிகநம்பி ஐம்புலச் சேர்க்கையில் வீழ்ந்துழன்று
கேட்டை விளைவித்துக் கொண்டேன் கதியுன் கிருபையெனும்
தேட்டை யருளியித் தீயனை யாள்வாய் தெளிவுறவே 90

அஞ்சலென் றோருக் கபய மளித்திடும் அம்பிகையின்
கொஞ்சலுக் கேற்ற குமாரநின் நாமங்கள் கூறிநிதம்
தஞ்சமென் றெண்ணியே தாட்பதம் சந்ததம் சார்ந்திடுவேன்
வஞ்சனை யற்றநின் மைந்தனை யாட்கொள வந்தருளே 91

அந்தணர் போற்ற அடியார் துதித்திட அம்பலத்தில்
மந்தகா சத்துடன் வள்ளிதெய் வானை மருங்கமரச்
சுந்தர மான சுரருடன் வாழ்வுறும் சுப்ரமண்யா
சந்ததம் என்னுளம் தன்னில் வசிப்பாய் சரண்புகவே 92

பொங்கி வழியும் புனலைச் சிரத்தில் புனைந்தழகு
தங்கி யுறையுந் தழற்கட வுள்தரும் தண்ணமுதே
இங்கித மாகவே என்னகந் தோன்றிநல் இன்பமதில்
முங்கியே வாழ முனைந்தெனை ஆள்வாய் முகமலர்ந்தே 93

பூசுரர் போற்றிடப் பொன்னுல கோங்கப் புனிதமுடன்
ஈசுரர் தந்திடும் எந்தாய் இறைநின் எழிலுணர்ந்து
பாசுரம் நல்கிடும் பாவலர் காணவே பாருலகில்
மீசுரர் ஏற்ற வருவாய் எனையாள வேலவனே. 94

அஞ்ஞானந் தன்னிலே ஆழ்ந்திடும் நின்றன் அடியவன்யான்
மெஞ்ஞான மேபெற மேன்மையாய் ஆதரி மேதினியில்
தஞ்ஞான மின்றித் தவித்திடும் மூடர் தமக்கருளும்
விஞ்ஞான மூர்த்தியாய்க் குன்றுதோ றாடிடும் வித்தகமே. 95

வஞ்சியர் சேர்க்கை வதிந்து நலிந்து வருந்தியுனைக்
கெஞ்சிய மெய்மொழி கேட்டு மகிழ்ந்து கிருபையுடன்
எஞ்சிய வல்வினை தீர்த்தெனைக் காப்பாய் எழில்பெருகிக்
கொஞ்சிய வள்ளி மனதுக் கிசைந்த குருபரனே. 96

உந்தன் திருக்கோலம் உண்மையாய்க் காண உவகையுடன்
எந்தன் மனத்துள் இனிதாக வெண்ணினேன் ஈதறிந்து
கந்தன் எனும்பேர் களிப்புறப் பெற்றவா கண்குளிர
வந்தன் புடனே வரந்தா வேண்டுமிவ் வையகத்தே. 97

மழுதனை யேந்திய மானுர் பரமனின் மைந்தநிதம்
தொழுதுனை வேண்டித் துணைமலர் நற்ருள் துதித்திடவோர்
பழுதிலா தென்றனைப் பார்த்தருள் செய்வாய் பகருலகம்
முழுதினு மோங்குமெய்ப் பூரண மான முதற்பொருளே. 98

எங்கணும் தங்கி எளியரைக் காக்க எழிலுறுநற்
கங்கணம் கொண்டிடுங் கந்தனே பூத்திடும் கானகத்தில்
வங்கணம் பேசிடும் வள்ளியைச் சேர்ந்தவா வாழ்வருளித்
தங்கணும் என்மனம் தன்னிலே நித்தமும் சண்முகனே. 99

கலித்துறைச் செய்யுள் கணக்குடன் நூறுய்க் கணித்திடவும்
பலித்திடச் செய்த பரன்சுதா பார்க்குள் பவமகல
ஒலித்திடும் நின்றன் முகமா றையும்தந் தொருமையுடன்
சலித்திடா தென்னுளம் சார்ந்திடு நித்தமும் சண்முகனே. 100

எச்சரிக்கை.

அண்டம் நடுங்க அரசோச்சி நின்ற அடலசுரன்
கண்டம் பறித்து மயில் சேவ லாக்கிய கந்தனடி
தண்டம் புரிந்தோர் கணப்பொழு தாயினும் தான்துதிமின்
உண்டெம் மவர்க்கு நிலையான வாழ்க்கை உலகினிலே.

பயனிலை.

பிறவி பலபல பெற்றிங் கிளைத்தவிப் பேயடியேன்
நறவின் கனியென நற்றமிழ்ப் பாசுரம் நானியம்பி
உறவி லுனைத்துதி ஓதவும் கந்தா உகந்தனையால்
மறவி தருமாயை மாய்ந்தது காக்க வருகுவையே.

மன்ருட்டு.

அகத்தியன் கீரன் அருண கிரிமுத லாங்கவர்போல்
இகத்தில் நினதருள் ஏற்ற புலவன்யான் இன்றெனினும்
மகத்துவ மானநின் பக்தியிற் கட்டுண்டு வாழுமெனை
உகத்தல் பெரிதோ உனக்கிது சண்முகா ஓதுவையே.

நூற்பயன்.

கலித்துறைச் செய்யுள் கருத்தினுள் வைத்துக் கழறுவர்க்குப்
பலித்திடும் வேணநற் பாக்யமும் வாழ்வும் பகர்மனையும்
ஒலித்திடும் மாமறை ஓம்பொருள் கிட்டும் உடலுருக்கி
வலித்துயிர் மாய்த்திடும் தென்றிசைக் கோனும் வாவஞ்சுமே.

அவையடக்கம்.

அன்பாய் முருகனை ஆனந்த மாய்க்கான ஆர்வமுற்றிங்
கென்பே உருகி இயற்றும் கலித்துறை என்றதமிழ்
இன்பாக் களையேற்றுக் குற்றம் களைந்தே இனிமையொடென்
முன்பா கவேபொறுத் தேற்பர்பூ மாந்தர் முகமலர்ந்தே.

வாழி.

ஆவினத் தோடுறை அந்தணர் வாழ்க அகிலமதில்
ஏவினத் தோடெழில் வேந்தனும் வாழ்க எழில்வணிக
மூவினத் தோடுழ வர்களும் வாழ்க முருகனது
பாவினத் தோடு கலித்துறை வாழ்கவிப் பார்தனிலே.

முற்றிற்று.

உ

இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள்

பரந்தாம முருக பஜனாமிர்த பக்திரஸக் கீர்த்தனம்

இப் புத்தகத்தை வாங்கிச் சங்கீத இன்பத்தைப் பருகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலை அணா 3.

கந்தரலங்காரக் கலித்துறை.

விலை அணா 0—1—0

சுப்பிரமணியர் தோத்திரவெண்பாமாலை

விலை அணா 0—1—0

விற்குமிடம்:—

மதுரை கீழஆவணி மூல வீதி,

ஜெய விலாஸ்

காபி அண்டு சாப்பாடு ஹோட்டலிலும், மற்றுமுள்ள புஸ்தகக் கடைகளிலும் கிடைக்கும்.